ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2336/47 - 2023 ජූනි මස 14 වැනි බදාදා - 2023.06.14

*2336/47 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் 14 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்***

*22 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 27(1) ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மேல், இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தை தாபிக்கின்றதும், 2001 ஆம் ஆண்டு யூன் மாதம் 6 ஆந் திகதிய 1187/15 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 22 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை, அவ்அட்டவணையின் நிரல் II இலுள்ள விடயங்களிற்கு நேரொத்ததான அவ்அட்டவணையின் நிரல் I இல் காணப்படுகின்ற "பிரயோக விஞ்ஞான பீடம்" என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்னர் பின்வரும் விடயம் மற்றும் பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன்.*

**அட்டவணை**

| "நிரல் I | நிரல் II |
|---|---|
| சித்த மருத்துவ பீடம் | அடிப்படை தத்துவத்துறை<br>குணபாடத்துறை<br>நோய்நாடல் மற்றும் சிகிச்சைத் துறை" |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2023, யூன் 12.*

EOG *06-0103*